CC-O. In Public Domain. Digitized by eGangotri

# ஸ்ரீ ஆதிசங்கராசார்யாள்

## தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடம்

சிருங்கேரி — கர்னாடகா



" சங்கரச்சங்கர ஸாக்ஷாத்பகவதே நமஸ்தஸ்மை ஸ்ரீ குரவே நமோ நமோ "

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

# ஜகன்மாதா
# சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள்

மாலா ஸ்தாகும்ப விபோத முத்ராம்
கரே விராஜத்கர வாரிஜாதாம்
அபார காருண்ய சுதாம்புராசிம்
ஸ்ரீ சாரதாம்பாம் ப்ரணதோஸ்மி நித்யம்

சதுர்புஜே சந்தர கலாவதம்ஸே
குசோன்னதே குங்கும ராக சோணே
புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்ப பாண
ஹஸ்தே ஸமஸ்தே ஜகதேகமாத:

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மிகவும் சின்ன வயதில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதபீநவ
வித்யாதீர்த்த மஹா சந்நிதானம் அவர்கள்

ரிஷ்ய சிருங்க புராதீசம் துங்காதீர நிவாசினம்
பக்தாமோத பிரதம் வந்தே வித்யாதீர்த்தமஹம்குரும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

34வது பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகர பாரதி மஹா ஸ்வாமிகளுடன்
ஸ்ரீ மஹா சந்நிதானம் அவர்கள்

ஸதாத்ம த்யான நிரதம் விஷயேப்ய: பராண்முகம்
நௌமி சாஸ்த்ரேஷீ நிஷ்ணாதம் சந்திரசேகர பாரதீம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஆதிசங்கராசார்யாள்

ச்ருதிஸ் ம்ருதி புராணநாம் ஆலயம்கருணாலயம். |
நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம் ॥

உலகமுழுவதும் அத்வைத தத்வத்தை போதித் தவர்களும், நான்கு திக்கிலும், நான்கு ஆம்னய பீடங்களை ஸ்தாபித்தவர்களும். வைதீக தர்மத்தை பரப்பியவர்களும், அவதார்புருஷாளுமான ஸ்ரீ ஆதி சங்கரர் ஸாக்ஷத் பகவத் ஸ்வரூபாள்.

இந்த சராசர ஜகத்தில் உள்ள மாணவர்களில் வைதீக தர்மத்தை உயர்த்துவதற்கு மூலமான ஸநாதனதர்மம், தாழ்வடைந்து துர்மார்க்கம் தலை விரித்தாடும்போது ஸநாதன வைதீக தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவே அவதரித்த மஹாபுருஷாள் ஸ்ரீசங்கர பகவத்பாதாள்.

ஸ்ரீ ஆதிசங்கரபகவத் பாதாள் கேரள தேசத்தில் காலடி என்னும் கிராமத்தில் 1200 வருஷங்களுக்கு முன்னல் ஸ்ரீசிவகுரு ஆர்யாம்பாள் தம்பதிகளுக்கு ஈசுவரானுக்ரஹமாக உதித்தார். அவருடைய ஐந்தாவது வயதிலேயே வைதீக ஸம்ஸ்காரத்தை அடைந்தவராய் குறுகிய காலத்திலேயே வேத சாஸ்திரங்களை கற்றறிந்தார். காலடி கிராமத்திற்கு ஸமீபத்தில் ப்ரவஹித்துக் கொண்டிருந்த பூர்ணை நதியை தன் தபஸ் சக்தியினல் மிகவும் வயதான தன் தாயாரின் ஸௌகர்யத்திற்காக தன் வீட்டின் முன்பு ப்ரவஹிக்கும்படி செய்தார். பிறகு குறுகிய காலத்திற்குள் தீவிர வைராக்யத்தை அடைந்தவ ராய் தாயாரின் அனுமதியோடு ஸந்யாஸம் பெற்று ஸ்ரீகோவிந்தபகவத் பாதாளுக்கு சிஷ்யராகி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



வேதாந்த ஞான, யோக, ரஹஸ்யங்களை கசடறக் கற்று குருவின் ஆக்ஞை பெற்று காசிக்குப்போய், ப்ரம்ஹ ஸூத்ரம், வேதோபநிஷத்துக்கள், ஸ்ரீமத் பகவத் கீதை முதலான அத்வைத க்ரந்தங்களுக்கு பாஷ்யங்கள் எழுதினர்கள்.

''ஸநாதன வைதிக கர்மாசரணமார்கமாகவே பக்தி ஞான, வைராக்யங்கள் உண்டாகி அத்வைத ஸித்தியை அடைவதே, மோக்ஷமார்க்கமென்று அருளிச் செய்தார்கள்''.

''பக்தியோடு ஸ்வார்த்தத்யாகம் செய்வதும், ஞானத்தோடு வஸ்துவின் விவரம் தெரிந்து கொள்வதும், வைராக்யத்தோடு அஸ்திரமான ப்ரபஞ்சத்திலுள்ள விஷய ஆசைகளுக்கு அதீதமான, ஸர்வவ்யாபகமான, பரமாத்ம தத்வத்தை, எல்லா இடத்திலும், எல்லா காலங்களிலும், எல்லா சமயங்களிலும், ஒரே ரூபமாக, தரிசித்து ப்ரகாசிப்பதே அத்வைத தத்வமென்று, ஸித்தாந்தம் செய்தார்கள்''.

ஸ்ரீ ஆதி சங்கரருடைய அத்வைத ஸித்தாந்தத்தின் விசேஷ தத்வத்தை ஜகத்திலுள்ள மேதாவிகள் எல்லாரும் சிரமேற்கொண்டு போற்றுவதால் ஸ்ரீசங்கர பகவத் பாதாள் காஷ்மீரத்தில் உள்ள ஸர்வக்ஞ பீடத்தை ஆரோஹணித்து, ஜகத்குருவாக பிரகாசித்தார்கள்.

ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத் பாதாசார்யாள் தர்ம புத்தி நிறைந்த பரத கண்டத்தில் பாரதீய ஸம்ஸ்க்ருதி ஸம்ப்ரதாயங்களுக்கு மூலக்கிழங்காகவுள்ள வேததர்மங்களில் ஜனங்களுக்கு உத்ஸாகம் குறைந்து, சார்வாகம் காபாலிகம், முதலான அவைதீக மதங்கள் தலை தூக்கி ஜனங்களிடையே

CC-O. In Public Domain. Digitized by eGangotri


ஹிம்ஸை, தெளர்ஜந்யங்கள். அதிகமாகி கஷ்டங்கள் வேரூன்றிய சமயத்தில் அஹிம்சையோடு கூடின வைதிக ஜீவன வழியாக பாரத ஜனங்களிடையே அன்யோன்ய ப்ரீதி பாவத்தை அதிகம் பெருக்கினர்கள். இந்த பரத கண்டத்தின் ஐக்யத்தை காப்பதற்காக, ஹிமயம் முதல் குமரி வரை தேசம் முழுவதும் பலமுறை ஸஞ்சாரம் செய்து, அதவைத தத்வத்தைப் பரப்பிக் கொண்டு, தக்ஷிண தேசத்தில் துங்காநதீ தீரத்தில் விபாண்டக மஹா முனிகளுக்கு, ஆச்ரமஸ்தானமாக இயற்கை அழகோடு பிரகாசித்துக்கொண்டிருக்கும், ருஷ்ய சிருங்க புரம், என்கிற சிருங்கேரீ க்ஷேத்ரத்துக்கு வருகைத் தந்தார்கள். ''அங்கு ஸூர்ய வெப்பம் தாளாமல் அவஸ்தை பட்டுக் கொண்டிருக்கும் தவளையைப் பார்த்த பாம்பு தன் தலையை விரித்து நிழலிக்கற் பித்ததைப் பார்த்து ஸ்ரீ ஆதிசங்கராள் ஆச்சர்யத் தோடு திடுக்கிட்டார்கள். அந்த புண்யஸ்தலத்தில் ஜன்ம விரோதமுள்ள ஜந்துக்கள், விரோதபாவ மில்லாமல் ஸமபாவதிருஷ்டியோடு ஜீவராசிகளிக்கு வழிகாட்டியாயிருப்பதால் இம்மாதிரி ஸ்தலத்தில் ஸ்ங்கல்பஸித்தாளான ஆதிசங்கர பகவத்பாதாள், ஸநாதந ஹைந்தவஸம்ஸ்க்ருதீ ஸம்ரக்ஷண மூலமாக, அத்வைத தத்வப்ரசாரம் நிரந்தரமாக பிரகாசிக்கும்படி செய்வதற்காக, முதல் முதலாக தக்ஷிண திக்கில் ஸ்ரீ சிருங்கேரி க்ஷேத்ரத்தில் ஜகந்மாதா ஸ்ரீசாரதா தேவியை ப்ரதிஷ்டித்து யஜுர்வேதப்ரதானமாக ''தக்ஷிணாம்னய ஸ்ரீசாரதாபீடத்தை ஸ்தாபிதது'' அவருடைய சிஷ்யர்களில் தேர்ந்தவரான, ஸ்ரீ ஸுரேசுவராசார்யாளை, ஸ்ரீ ஜகத்குரு பரம்பரையில் முதல் பீடாதிபதியாக நியமித்தார்கள். அதுபோலவே கிழக்கு திக்கில், பூரீ ஜகன்னாதத்திலும், மேற்கு

CC-O. In Public Domain. Digitized by eGangotri



திக்கில் த்வாரக க்ஷேத்திரத்திலும் வடக்கு திக்கில் பத்ரிகாச்ரமம் (ஜ்யோதிர்மடத்தில்) அவருடைய சிஷ்யாளான, ஸ்ரீ ஹஸ்தாமலகாசார்யாள், ஸ்ரீபத்மபாதாசார்யாள், ஸ்ரீதோடகாசார்யாள், மூவரையும்- அந்தந்த மடங்களில் பீடாதிபதிகளாக நியமித்து நான்கு திக்குகளிலும் நான்கு வேதங்களுக்கு நான்கு ஆம்னய பீடங்கள் மாத்திரம் ஸ்தாபித்தார்கள். ஷண்மதஸ்தாபனாசார்யாளான ஸ்ரீசங்கரபகவத் பாதாள், பரதகண்டத்தில் உள்ள ப்ரஸித்த தீர்த்தக்ஷேத்ரங்களை தரிசிப்பதோடல்லாமல், ஸ்ரீராமேசுவரம். ஸ்ரீசைலம், நேபாளம், இதுகளோடு அஷ்டாதச சக்தி பீடங்களுள் வாமாசார பூஜாவிதாநங்களை திருத்தி வைதிக பூஜாவிதாநங்களை நிலைநாட்டினார்கள். காஞ்சியில் ஸ்ரீசக்ரயந்த்ர ஸ்தாபனம் மாத்ரமே செய்தார்கள். திருமலையில் வேங்கடசுவரஸ்வாமி ஸந்நிதியில். 'ஸ்வர்ணாகர்ஷண பைரவ யந்த்ரஸ்தாபனம்' செய்து, ஜனகர்ஷண, தனகர்ஷணங்களை பஹுளார்த்தமாக மேன்மேலும் பெருகும்படி செய்தார்கள்.

ஸகுணோபாஸனத்திற்கு முதல் படியாதலால் பக்தர்கள் நித்யமும் மனனம் செய்துகொள்ளும் பொருட்டு, சிவ, விஷ்ணு, தேவீ, பரமாக ஸுலபசைலியில், ஆயிரக்கணக்கான ஸ்தோத்ரங்களை கவனம் செய்தார்கள். கடைசியில் ஸ்ரீசங்கரபகவத்பாதாள், நித்ய, சுத்த, புத்த, முக்த, ஸச்சிதானந்தாளாய், கேதாரநாதத்தை அடைந்து ஹிமவத்பர்வத குஹைகளில் அந்தர்தானமாகி தன்னுடைய வாஸஸ்தானமான கைலாஸத்தை அடைந்தார்.

தக்ஷிணாம்னய ஸ்ரீசிருங்கேரீ சாரதா பீடத்தில் ஸ்ரீஸுரேசுவராசார்யாள் முதல் இடைவிடாத குரு

CC-O. In Public Domain. Digitized by eGangotri



பரம்பரையில் 11 வது ஆசார்யாளாக வந்த அபர சங்கராசார்யஸ்வரூபாளும், சதுர்வேத பாஷ்ய கர்த்தாளுமான, ஸ்ரீ வித்யாரண்ய மஹா ஸ்வாமிகள் பீடத்தை அலங்கரித்தார்கள். அவாளுடைய காலத்தில் பாரதீய ஸம்ஸ்கிருதியை ஸரியான மார்க்கத்தில் திருப்ப எண்ணி, விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து ஸநாதநதர்மத்தை நிலைநாட்டினார்கள். ராஜ்யபாலகர்களில் குருபக்தி. சிரத்தா, ஆஸக்திகள், பெருகி ஸ்ரீ சாரதா குருபீடம் மஹாஸம்ஸ்தானமாகி ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், தேசத்தில் உள்ள மைஸூர், கொச்சி, திருவாங்கூர், காசீ, தஞ்சாவூர், பரோடா, க்வாலியர், இன்டோர், நேபாள், காஷ்மீரம். மஹாராஷ்ட்ரம், ஹைதர், டிப்புஸுல்தான், நைஜாம் முதலிய ராஷ்ட்ரப்பிரபுக்கள், ஸ்ரீசாரதா பீடத்தை அலங்கரித்த ஸ்ரீ ஜகத்குருவர்யாளையும் ஸ்ரீ சாரதா தேவியையும் ஸேவித்து, அனுக்ரஹங்களை அடைந்து தன்யர்களாகிருர்கள். ஸ்ரீவித்யாரண்யர் காலத்தில் சரித்ரப் ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ வித்யா சங்கர ஆலயத்தை, அமரசில்பி ஜக்கன்ன அவர்களால், சிற்ப அழகோடு கூடின மூர்த்திகளேயல்லாமல் ஸ்ரௌர்ய ஸித்தாந்த ஜ்யோதிஸ்சாஸ்த்ர பரமான அநேக விவரங்களோடு நிர்மாணிக்கப் பட்டு, இன்றும் கூட சிருங்கேரிக்கு வரும் யாத்ரீகர்களுக்கு கண்ணுக்கு விருந்தளித்து, மகிழ்வித்து வருவது, நம்முடைய பூர்வகால அழகு மேம்பாட்டை எடுத்துகாட்டுவது போல ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய குருசிஷ்ய பரம்பரையில் தற்போது 35 வது பீடாதிபதிகளாக ப்ரகாசித்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யர்-ஸ்ரீமதபிநவ வித்யா தீர்த்த மஹா ஸ்வாமிகள் ஆரோஹணித்துள்ளார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், மிகவும் சின்ன வயதிலேயே, அவருடைய குருவர்யாளான ஸ்ரீ ஸ்ரீ சந்த்ரசேகர பாரதீமஹாஸ்வாமிகளின் கிருபைக்கு பாத்ராளாகி ஸ்ரீசாரதாம்பா அனுக்ரஹத்தோடு அவருடைய சிஷ்யராகி குரு பரம்பரையை மிகவும் ப்ரகாசமாக செய்து வருகிறார்கள்.

"சம்போர்மூர்த்தி: சரதிபுவனே
ஸ்ரீசங்கராசார்ய ரூபா ||

என்று சொல்லியபடி அவர்கள் ஸாக்ஷாத் "அபிநவ சங்கரராகவே" பாரததேசம் முழுவதும், இமயம் முதல் குமரி வரை மூன்று முறை விஜய யாத்ரைகள், செய்து, ஸநாதன வைதிக தர்ம ப்ரசாரம் மூலமாக, அத்வைத தத்வ பிரபோதனை செய்துகொண்டு பல இடங்களில் சங்கர மடல்கள் ஸ்ரீ சாரதாம்பா தேவி ஆலயங்கள் வேத சாஸ்த்ர பாடசாலைகளையும், ஆத்யாத்மிகப்ரசார கேந்த்ரங்களையும் ஸ்தாபித்து, மக்களிடையே ஸநாதன தர்மங்களில் பக்தி ச்ரத்தைகளை, அதிகமாக வளரச்செய்தார்கள். ஆதிசங்கரர் பிறந்த இடமான காலடி க்ஷேத்ரத்திலும், ஸ்ரீசிருங்கேரீ க்ஷேத்ரத்திலும், பழைய கட்டடங்களையெல்லாம் புதிதாக்கியதோடு, தினமும் வரும் யாத்ரிகர்களின் ஸௌகர்யத்திற்காக புதிய வீடுகளையும் கட்டி வைத்தார்கள். அவ்யாஜ கருணாமூர்த்திகளான ஸ்ரீமதபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் சிருங்கேரியில் சாரதா தன்வந்தரி வைத்ய சாலையை புதிய ஸாதனங்களோடு ஸகல ஸௌகர்யங்களையும் ஏற்படுத்தினார்கள் ஸ்ரீசாரதாபூஜையில் மிகவும் ஆஸக்தியுள்ள ஸ்ரீஸ்வாமிகள், சிஷ்ய

CC-O. In Public Domain. Digitized by eGangotri



வாத்ஸல்யத்தோடு கூடியவருய் தன் திவ்ய தரி சனத்தால் பக்த கோடிகளை ஸதா அனுக்ரஹித்து வருகிருர்கள்.

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ மதபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தனக்குப் பின்னுல் உத்தராதிகாரிகளாக ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீதீர்த்த மஹா ஸ்வாமிகள் அவர்களை 1974 ல் சிஷ்ய ஸ்வீகாரம் செய்து கொண்டு தனக்குப் பின் உத்தர பீடாதிபதி களாக செய்து கொண்டார்கள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளவர்கள். பஹுசாஸ்த்ர பாண்டித்ய முடையவர்களாகவும், தமிழ், கர்நாடகம் கேரளம் ஹிந்தி, ஸம்ஸ்கிருதம், ஆந்த்ரம் முதலான பாஷைகளில் ஸஹஜமான பாண்டித்ய ப்ரதி பையை அடைந்தவர்கள். ஸ்ரீஸ்வாமிகள் குருவுடன் இரு முறைகள் பாரததேசம் முழுவதும் விஜய யாத்ரை செய்து தர்மப்ரசாரம் செய்துவந்தார்கள். மறுபடி ஜகத்குரு ஸ்ரீ பாரதீ தீர்த்தமஹா ஸ்வாமிகள் பக்த கோடிகளை அனுக்ரஹிக்கும் பொருட்டு பல இடங்களில் விசேஷமாக ஸஞ்சாரம் செய்து ஸ்ரீ சாரதா சந்த்ரமௌளீசுவரர்களை ஸேவித்துக் கொண்டு ஸநாதன தர்மத்தை அவருடைய ம்ருது மதுர அனுக்ரஹபாஷணங்களை மொழிந்து பக்தர்கள் இடத்தில் ஞான, வைராக்கியங் களை பெருக்கி அவர்களை கிருதார்த்தர்களாக்கி வருகிருர்கள்.

குருவே ப்ரத்யக்ஷதைவம் ஆனதால் ஆஸ்திக்ய முள்ள ப்ரதிமானவர்களும் தன் ஜன்மாவை ஸார்த் தகம் செய்து கொள்ள அவதார புருஷாளான ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யாளின் ஸந்தர்சனம் உபதேசம் முதலான கார்யங்களை செய்து உத்தாரம் ஆகும்படி செய்து கொள்ள தருணோபாயம்.

**ஸத்யம் சிவம் ஸுந்தரம்**

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

# சிருங்கேரிக்ஷேத்ர ப்ரயாணம்

## ஸுலபமானது

மதராஸிலிருந்து ரயிலில் மங்களூர் வந்து அங்கிருந்து பஸ்ஸில் சிருங்கேரி சேரலாம்.

ஹைதராபாத்திலிருந்து நேராக ஹாஸ்பேட் வழியாக சிருங்கேரி R. T. C. பஸ் ஸௌகர்யமுள்ளது.

பெங்களூரிலிருந்து நேராக R T. C. பஸ்ஸில் சிருங்கேரி காலை ஒரு பஸ்ஸும், ராத்திரி 2 பஸ்ஸுகளும் உளளன.

### சிருங்கேரியில் தரிசிக்க வேண்டிய ஸ்தலங்கள்

ஆதிசங்கரர் ப்ரதிஷ்டை செய்த ஸ்ரீ சாரதாலயம், ஸ்ரீசக்தி கணபதி, தோரண கணபதி, ஸ்ரீபவானி மலஹானி கரேசுவர ஸ்வாமி தேவாலயம், ருஷ்ய சிருங்கமஹ ரிஷி தபஸ் செய்த ஸ்தலம், கிக்கா. ஸ்ரீவனதுர்க்கா காலபைரவர் ஆஞ்ஜனேய சுப்ரமண்ய ஆலயங்கள், ப்ரஸித்தி பெற்ற சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஸ்ரீ வித்யா சங்கர ஆலயம் முதலானவை உள்ளன.

### ஸ்ரீ சிருங்கேரி ஸமீபத்தில் உள்ள பார்க்க வேண்டிய க்ஷேத்திரங்கள்.

தர்மஸ்தலா, சுப்ரமண்ய, உடுப்பி, கோகர்ணம், கொல்லூர் மூகாம்பிகை க்ஷேத்ரங்கள்.

(பிரும்மஸ்ரீ முல்லன்றம் M. V. ராமநாத கனபாடிகள், திருப்பதி, அவர்களால் தமிழாக்கம் செய்யப்பெற்றது.)

ஸ்ரீ ஜகத்குருக்கள் அனுக்ரஹத்துடன்
பண்டிட் V. V. சர்மா

தர்மோ ரக்ஷதி ரக்ஷித :

---

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமதபிநவ வித்யாதீர்த்த மஹா சந்நிதானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்ரீ பாரதிதீர்த்த ஸ்ரீ சந்நிதானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ சாரதா நவராத்திரி உத்ஸவத்தில் இரண்டு ஆசார்யர்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri



துங்காநதி தீரத்தில் ஸ்ரீ வித்யா சங்கரர் ஆலயத்துடன் ஸ்ரீ சிருங்கேரி சாரதா க்ஷேத்திரம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri